**பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு**

**தேயிலை ஆராய்ச்சி சபை**

# இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம்

# வெற்றிடம்

**தலவாக்கலை, சென். கூம்ஸ் தோட்டத்தில் நிலவும் பின்வரும் பதவிக்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

## சிரேஷ்ட உதவி இலிகிதர்
## Senior Assistant Clerk

**பணி விளக்கம்**

வருடாந்த வரவு செலவுத்திட்டம், முன்னேற்ற அறிக்கை, மாதாந்த கணக்குகள் மற்றும் அது தொடர்பான ஏனைய புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை பூர்த்தி செய்தல், முகாமையாளரின் வழிகாட்டலின் கீழ் பிரதான இலிகிதருக்கு (நிர்வாக அதிகாரி) உதவுதல்.

**கல்விசார் தகைமைகள் மற்றும் அனுபவம்:**

க.பொ.த. (சா/த) பரீட்சையில் எண்கணிதம்/கணிதம் மற்றும் ஆங்கிலம் சகிதம் சித்தி. (க.பொ.த (சா/த) பரீட்சையில் எண்கணிதம் / கணிதம் மற்றும் ஆங்கில சித்தி (இது இந்தத் துறையில் அனுபவமுள்ளவர்களுக்கு / பெருந்தோட்ட துறையிலுள்ளவர்களுக்கு பொருந்தாது) உடன் உதவி இலிகிதராக ஐந்து வருட கால அனுபவம்)

**சம்பளம்:**

தோட்ட உழியர்கள் கூட்டு ஒப்பந்தத்தின் பிரகாரம் சம்பளம் பேசித் தீர்த்துக்கொள்ளலாம்.

**வயது :** 25 வயதிற்கு குறையாமலும் 50 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். (TRI தோட்டங்களில் சேவையில் உள்ளவர்ளுக்கு வயதெல்லை ஏற்புடையதல்ல)

இந்தப் பதவி நிரந்தரமானது. தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் தலவாக்கலை சென். கூம்ஸ் தோட்டம் / இரத்தினபுரி சென். ஜோக்கிம் தோட்டம் அல்லது சேவை தேவைப்பாட்டின் பிரகாரம் இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தினால் நிர்வகிக்கப்படும் ஏனைய வேறு தோட்டங்களில் வேலை செய்வதற்கு வேண்டப்படுவர்.

பிறப்புச் சான்றிதழின் பிரதி, இயைபுடைய கல்வி மற்றும் ஏனைய தொழில்சார் தகுதிகள், சேவைச் சான்றிதழ்கள் மற்றும் புதுமையான திறன்கள் ஆகியவற்றுடன் முழுமையான சுய தரவை வழங்கும் விண்ணப்பம் மற்றும் விண்ணப்பதாரரின் திறன்களை மதிப்பிடக்கூடிய உறவினர் அல்லாத இரு நடுவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் சகிதம் 2025 ஆகஸ்ட் 15ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் கீழே உள்ள முகவரிக்கு தபால் மூலம் அனுப்பவும். மேலும் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

அரசாங்க சேவை/ அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றின் ஊழியர்களின் விண்ணப்பங்கள் அவ்வாறான நிறுவனத் தலைவரூடாகவே அனுப்பப்படல் வேண்டும். இவ்வாறான தேவைப்பாட்டிற்கு அமைந்தொழுகாத விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கு இது வழிவகுக்கும்.

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் www.tri.lk எனும் இணைய தளத்திற்குப் பிரவேசிக்கவும்.

**பணிப்பாளர் - பிரதான நிறைவேற்று அதிகாரி,**
**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம்,**
**சென் கூம்ஸ், தலவாக்கலை.**